இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 115 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 19 – புதன்கிழமை 04 டிசம்பர் 2024 – கோவை ★ ★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 115: Thiruvalluvar Year - 2055 - Karthigai 19 - Wednesday 04 December 2024 - Kovai ★★ 10 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) செங்கல்பட்டு மாவட்டம், இடைகழிக்காடு பகுதியில் “ஃபெஞ்சல்” புயல் காரணமாக பெய்த கனமழையால் மின்கம்பங்கள் வீழ்ந்ததையொட்டி, மின்கம்பங்கள் அமைத்திடும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் எம்.பாபு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.நந்தகுமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.அருண்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) விழுப்புரம் கிழக்கு, பாண்டி ரோட்டில் உள்ள வி.வி.ஏ. மஹாலில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு வேட்டி, சேலை, உணவுப் பொருட்கள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார். உடன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மாவட்டப் பொறுப்பாளர் பொன் கௌதம சிகாமணி, நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், லட்சுமணன், சிவா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், போக்குவரத்துத் துறை ஆணையருமான சுன்சோங்கம் ஜடக் சிரு, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## ஃபெஞ்சல் புயல்: தமிழ்நாட்டில் வரலாறு காணா சேதம்! சீரமைக்க

# ரூ. 2000 கோடி புயல் நிவாரண நிதியினை உடனடியாக விடுவித்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம்!

**சென்னை, டிச.4–**

**தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்டுள்ள கடுமையான வரலாறு காணாத சேதங்களைக் கருத்தில்கொண்டு, உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தைத் தற்காலிகமாக சீரமைக்க 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியினை விடுவித்திடக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்டுள்ள தாக்கத்தினையும், அதனால் ஏற்பட்டுள்ள கடுமையான மற்றும் வரலாறு காணாத சேதங்களையும் இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சேதமடைந்த உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை தற்காலிகமாக சீரமைக்க தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியினை விடுவித்திடுமாறு கோரி நேற்று முன்தினம் (2.12.2024) கடிதம் எழுதியுள்ளார்.

**புயல் கனமழை! சாலைகள் மின் இணைப்புகள் கடும் சேதம்!**

அக்கடிதத்தில், ஃபெஞ்சல் புயல் 23, நவம்பர்-2024 அன்று குறைந்த தாழ்வழுத்தப் பகுதியாக உருவெடுத்து, தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் வரலாறு காணாத பேரழிவை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தொடக்கத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் மிக கனமழை பெய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.



டிசம்பர் 1 ஆம் தேதி ஃபெஞ்சல் புயல் கரையைக் கடந்தபோது, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காற்றின் வேகம் மணிக்கு 90 கி.மீ வேகத்தைத் தொட்டதால், சாலைகள் மற்றும் மின் இணைப்புகள் கடுமையாக சேதமடைந்தன என்றும், தருமபுரி, கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட உள்மாவட்டங்களில் கனமழை மற்றும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

> **“முதலமைச்சர் அவர்கள், புயல் வெள்ளத்தினால் 9,576 கி.மீ சாலைகள், 1,847 சிறுபாலங்கள் மற்றும் 417 குளங்கள் சேதமடைந்துள்ளதாகவும், 1,649 கி.மீ அளவிற்கு மின் கடத்திகள், 23,664 மின்கம்பங்கள் மற்றும் 997 மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதாகவும், 1,650 பஞ்சாயத்து கட்டிடங்கள் 4,269 அங்கன்வாடி மையங்கள், 205 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5,936 பள்ளிக் கட்டடங்கள், 381 சமுதாயக் கூடங்கள் மற்றும் 623 குடிநீர் வழங்கல் பணிகள் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் வருத்தத்துடன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.”**





**1.5 கோடி பேர் பாதிப்பு!**

இந்தப் புயல் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதோடு, பெரும்பாலான பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளதாகவும், பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வசிக்கும் மக்களை

**தொடர்ச்சி 3–ஆம் பக்கம்**

## பெரியாரியக் கொள்கைகளை நாளும் சமுதாயத்தில் விதைத்திடும்

# ஆசிரியர் கி.வீரமணி அய்யா வாழிய பல்லாண்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 4 -**

**திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.**

திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழினம் விழிப்புறவும் பகுத்தறிவால் மேன்மையுறவும் நாளும் தன் பரப்புரைத் தொண்டறத்தை மேற்கொண்டு வரும் பெரியாரின் பெருந்தொண்டர், தாய்க்கழகத்தின் தலைவர் மானமிகு ஆசிரியர் கி. வீரமணி அய்யா அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**தமிழினத்தின் அரணாக விளங்கும் பெரியாரியக் கொள்கைகளை நாளும் சமுதாயத்தில் விதைத்திடும் ஆசிரியர் வாழிய பல்லாண்டு!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) திராவிடர் கழகத் தலைவர், கி.வீரமணி அவர்களின் 92–வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கி.வீரமணி அவர்களின் மனைவி திருமதி வீ.மோகனா அம்மையார், திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.